**செ.வெ.எண்: 87** **நாள்: 30.11.2016**

# புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் 29.11.2016 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், அரசமலை ஊராட்சி, வையாபுரியில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.1 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட பண்ணைக்குட்டை பணியையும், தொட்டியம்பட்டி ஊராட்சி, தொட்டியம்பட்டியில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள அம்மா பூங்கா மற்றும் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள அம்மா உடற்பயிற்சிக்கூடம் அமைப்பதற்கான இடத்தினை பார்வையிட்டும், மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.90000 மதிப்பீட்டில் கட்டப்பட்ட மண்புழு இயற்கை உரம் தயாரிக்கும் கொட்டகையில் மண்புழுக்களை விட்டு மண்புழு உரம் தயாரிக்கும் பணிகளை துவக்கி வைத்தும், ரூ.75000 மதிப்பீட்டில் கட்டப்பட்ட குப்பைகளை பிரிக்கும் கட்டிட கட்டுமானப்பணியையும், சிலம்பன் கண்மாயில் கருவேலம் மரங்களை நட்டும் என பல்வேறு வளர்ச்சிப்பணிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வின் போது கண்மாய்களில் நடப்பட்டுள்ள மரக்கன்றுகளை தினமும் உரிய முறையில் நீர் ஊற்றி பராமரிக்கவும், மண்புழு இயற்கை உரம் தயாரிக்கும் கொட்டகையில் மண்புழுக்களை கொண்டு மண்புழு இயற்கை உரத்தினை தயாரித்து விவசாயிகளுக்கு குறைந்த விலையில் வழங்கவும், மேலும் முடிவுற்ற பணிகளை உரிய முறையில் பராமரிக்கவும், நடைபெறும் பணிகளை தரமான கட்டுமானப்பொருட்களை கொண்டு விரைவாக கட்டிமுடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொன்னமராவதியில் புதிதாக கட்டப்பட்ட வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் மரக்கன்றுகள் நடுவதற்காக சுத்தம் செய்யும் பணியினை பார்வையிட்டார்.

மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் மரக்கன்றினை நட்டார்.

இந்த ஆய்வின் போது திட்ட இயக்குநர் (மா.ஊ.வ.மு) திரு.சந்தோஷ்குமார், ஊரக வளர்ச்சித்துறை மற்றும் வருவாய்த்துறை உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**